


# எங்கள் முனிசிபாலிட்டி தொடர்பாக வரியை அறிமுகப்படுத்தல் கழிவுப் பொருள் சாக்குகள்

## 1 ஜனவரி 2013

வருங்காலத்தில், வெடறல் மற்றும் காண்டொன் சட்ட விதிகளின் கீழும் கழிவுப் பொருளை நிர்வகித்தல் தொடர்பான புதிய உள்ளூர் விதிகளின் கீழும் கழிவுப் பொருளை அகற்றுவதால் ஏற்படும் செலவுகளுக்கு அந்தக் கழிவுப் பொருளை உருவாக்குவோரே பணம் செலுத்துவார்கள்.

### உங்களைப் பொறுத்து இதன் கருத்து பின்வருமாறு:

- வீட்டுக் குப்பை தொடர்பாக, **ஜனவரி 1ஆம் தேதியிலிருந்து உத்தியோகபூர்வமான, வரி செலுத்தப்பட்ட வெள்ளை மற்றும் பச்சை நிறமான சாக்குகள்** மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- வழமையான உபையோகத்திலுள்ள (சாம்பல், கறுப்பு அல்லது தெளிவான) சாக்குகள் தடைசெய்யப்படும்.
- இந்த முறையை ஏமாற்ற முயற்சிப்போருக்குத் தண்டனைகள் விதிக்கப்படும்.

---

**டிசெம்பர் 10ஆம் தேதியிலிருந்து** பின்வரும் ஒரு விலையில் உங்கள் வழமையான கடைகளில் சாக்குகளை நீங்கள் வாங்கிக்கொள்ள முடியும்:

| | | |
|---|---|---|
| 17 லீட்டர்கள் | 10 சாக்குகள் உள்ள சுருள் | Fr. 10.- |
| 35 லீட்டர்கள் | 10 சாக்குகள் உள்ள சுருள் | Fr. 20.- |
| 60 லீட்டர்கள் | 10 சாக்குகள் உள்ள சுருள் | Fr. 38.- |
| 110 லீட்டர்கள் | 5 சாக்குகள் உள்ள சுருள் | Fr. 30.- |

**கழிவுப் பொருளை வகைப்படுத்தி...அதனை மீட்டுக்கொள்ளவும்**

---

மேலதிக தகவலுக்கு, தயவுசெய்து உங்கள் உள்ளூர் கவுன்சில் அலுவலகங்களைத் தொடர்புகொள்ளவும் அல்லது (*இலவச தொலைபேசி இலக்கம்*) 0800 804 806 இல் அழைக்கவும்.

**www.vaud-taxeausac.ch**

gedrel vos déchets nous intéressent | SADEC optimisez vos déchets | VALORSA UNE SOLUTION POUR VOS DÉCHETS !

## வரி விதிக்கப்பட்ட சாக்குகள், அத்துடன் மேலதிக வரி, எதற்காக?

எங்கள் முனிசிபாலிட்டி 'மாசுபடுத்துபவர் பணம் செலுத்துகிறார்' எனப்பட்ட நெறிமுறையைப் பிரயோகிக்கத் தீர்மானித்துள்ளது : கழிவுப் பொருளை உற்பத்தி செய்பவரே அதனை அகற்றுவதற்குப் பணம் செலுத்துகிறார்.

விரைவில், கழிவுப் பொருள் சாக்குகள் தொடர்பாகப் புதிய நிறங்கள் அறிமுகப்படுத்தப்படும். **இந்தச் சாக்குகளைப் பயன்படுத்துதல் கட்டாயமானதாக** இருக்கும். இவை பிரதேசம் முழுவதிலும் ஒரேமாதிரியானவையாக இருக்கும். அதிகளவிலான கடைகளில், மற்றும் தபால் அலுவலகங்களில் இவை விற்பனை செய்யப்படும்.

ஒரு சாக்கின் விலை செலவுகள் அனைத்தையும் ஈடுசெய்யாது. கண்ணாடி, கடுதாசி, போன்ற பொருட்களை அகற்றுதல் தொடர்பான செலவுகளை, கழிவுப் பொருள் நீக்கும் பகுதியால் ஏற்படும் செலவுகளை மற்றும் அது போன்ற வேறு செலவுகளை ஈடுசெய்வதற்கு ஒரு மேலதிக வரி பயன்படுத்தப்படும். இது தொடர்பாகக் கவுன்சில் உங்களுக்கு ஒவ்வொரு வருடமும் ஒரு விலைத் துண்டைக் கொடுக்கும். காலப்போக்கில் இந்த வரியில் மாற்றம் ஏற்படலாம். இந்த வரியின் அளவு உங்களின் செயல் ஊக்கம், மற்றும் உங்கள் இடத்தில் கழிவுப் பொருட்களை நிர்வகிப்பதற்குச் செய்யப்படும் பொதுவான முயற்சி என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கும்.

ஆதரவும் அறிவுரையும் குறிப்பாகக் குடும்பங்களுக்குக் கிடைப்பதற்காக உத்தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் உள்ளூர் கவுன்சில் அலுவலகங்கள் உங்களுக்கு அறிவிக்கலாம்.

### நகர்ப்புற கழிவுப் பொருள்

*வீட்டுக் கழிவுப் பொருள், தொகுதியாகவுள்ள கழிவுப் பொருள், கடுதாசி, கார்ட்போர்ட், கண்ணாடி, போன்றவை.*

*கழிவுப் பொருள் நீக்கும் பகுதிகள், சூழ்நிலைப் பகுதிகள், எடுத்துச் செல்லுதல், எரித்துச் சாம்பலாக்குதல், போன்றவை*

நிதிக்கான மூலங்கள்

பிரதேசரீதியான கழிவுப் பொருள் சாக்கு வரி

மற்றும்

உள்ளூர் கவுன்சில் பொறுப்பாகவுள்ள கழிவுப் பொருள் தொடர்பான மேலதிக வரி.